# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2012 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, புத்த சிராவக பிக்குப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டம்

---

*(2012 ஆம் ஆண்டு யூலை மாதம் 11 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2012, யூலை மாதம் 13 ஆம் திகதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *16.00*** **தபாற் செலவு : ரூபா *10.00***

**2012 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, புத்த சிராவக பிக்குப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டம்**

[2012 ஆம் ஆண்டு யூலை மாதம் 11 ஆம் திகதி அத்தாட்சிப்படுத் தப்பட்டது]

ச.வ.ஓ. 52/2006

**1996 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, புத்த சிராவக பிக்குப் பல்கலைக்கழகச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப்பெயர்.*

**1.** இச்சட்டம், 2012 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, புத்த சிராவக பிக்குப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*1996 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, புத்த சிராவக, பிக்குப் பல்கலைக்கழக சட்டத்திற்கான பொதுத் திருத்தம்.*

**2.** (1) (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1996 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, புத்த சிராவக பிக்குப் பல்கலைக்கழகச் சட்டத்திலும் ஏதேனும் வேறு எழுத்திலான சட்டத்திலும் "புத்த சிராவக பிக்குப் பல்கலைக்கழகம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இலங்கை பிக்குப் பல்கலைக்கழகம்" என்னும் சொற்களை இடுதல் வேண்டும்.

(2) ஏதேனும் ஒழுங்குவிதி, விதி, அறிவிப்பு, அறிவித்தல், ஒப்பந்தம், தொடர்பாடல் அல்லது வேறு ஆவணத்திலுள்ள "புத்த சிராவக பிக்குப் பல்கலைக்கழகம்" என்பது பற்றிய ஒவ்வொரு குறிப்பீடும் முறையே "இலங்கை பிக்குப் பல்கலைக்கழகம்" என்பதற்கான குறிப்பீடு ஒன்றாக வாசித்துப் பொருள்கொள்ளப் படுதல் வேண்டும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) (ட) என்னும் பந்தியில் "அத்துடன்" என்னும் சொல்லை நீக்கஞ்செய்வதன்மூலம் ;

(2) (ண) என்னும் பந்தியை (ந) என்னும் பந்தியாக மீள எழுத்திடுவதன்மூலம் ; அத்துடன்

(3) (ட) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை இடுவதன்மூலம் :-

2-PL 005803 - 1,115 (2012/06)

"(ண) பல்கலைக்கழக குறிக்கோள்களுடன் ஒத்ததாக வுள்ள மதகுரு மாணவர்களுக்கு பட்டப்பின் படிப்பு கற்கைநெறிகளை நடாத்துதல் ;

(த) பல்கலைக்கழகத்தினால் தேவைப்படுத்தப் பட்டவாறாக உள்ளூர் மற்றும் வெளியூர் இணை நிறுவனங்களை தாபித்தல் ; அத்துடன்".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவினை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் நிக்காயவின் எவரேனும் மகாநாயக தேரர் அல்லது பிரதம மகாநாயக தேரர் பல்கலைக்கழகத்தின் மகா மகோபாத்தியாயராக நியமனத்தை ஏற்பதைத் தவிர்க்கும்பட்சத்தில் புத்த சாசனம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர், விடயத்திற்கேற்ப, அத்தகைய மகாநாயக தேரருடனான அல்லது உத்தரீத்தர சபையுடனான கலந்தாலோசனையுடன் பல்கலைக்கழகத்தின் மகா மகோபாத்தியாயராக இருப்பதற்கென அத்தகைய நிக்காயவின் வேறொரு மகாதேரரை நியமிப்பதற்கு சனாதிபதிக்கு விதப்புரை செய்யலாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு அதன் (ii) ஆம் பந்தியை உடனடுத்துப்பின்னர் பின்வரும் புதிய பந்தியை இடுவதன்மூலம் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

"(iiஅ) ஒவ்வொரு பீடத்தினதும் பீடாதிபதி;"

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் -

(அ) அதன் (அ) என்னும் பந்தியில் ''அமைச்சரால்'' என்னும் சொல்லிற்குப் பதிலாக ''சனாதிபதியால்'' என்னும் சொல்லை இடுவதன்மூலம் ;

(ஆ) அதன் (ஆ) என்னும் பந்தியில் "பௌத்த மதக் கற்கைகளில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றின் பட்டப்பின் பட்டமொன்றைக் கொண்டிருக்கும் ஆளொருவராக இருத்தல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாத காலப் பகுதியில் செய்யப்பட்ட ஆராய்ச்சியொன்றின் மீது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பௌத்த மதக் கற்கைகளில் அல்லது அதனுடன் தொடர்புபட்ட வேறெவையேனும் பாடங்களில் பட்டப்பின் பட்டமொன்றையும் கற்பித்தல் துறையில் பத்து ஆண்டுகள் அனுபவத்தைக் கொண்டிருக்கும் ஆளொருவராகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் மேலதிகமாக அவர் கீழைத்தேய மொழிகளில் சிறந்த அறிவையும் கொண்டிருத்தல் வேண்டுமெனத் தேவைப்படுத்தப் படலும் வேண்டும்.'' என்னும் சொற்களை இடுவதன்மூலம்.

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் -

(அ) அதன் (iii) ஆம் பந்தியில் ''அமைச்சருக்கு'' என்னும் சொல்லிற்குப் பதிலாக "அமைச்சர் ஊடாக சனாதிபதிக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலம் ;

(ஆ) அதன் (iv) ஆம் பந்தியில் ''அமைச்சரால்'' என்னும் சொல்லிற்குப் பதிலாக "சனாதிபதியால்" என்னும் சொல்லை இடுவதன்மூலம் ;

(இ) அதன் (v) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன்மூலம்;

"(vi) இச்சட்டத்தின் வேறெவையேனும் ஏற்பாடுகளில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இப்பிரிவு நடைமுறைக்கு வரும் தேதிக்கு உடன்முன்னரான நாளன்று கடைசியாகப் பதவிவகித்த பல்கலைக்கழகத்தின் மகோபாத்தியாயரின் பதவிக்காலம், இப்பிரிவு நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து மேலும் மூன்றாண்டுக் காலப்பகுதியொன்றிற்குத் தொடர்ந்திருத்தல் வேண்டும்.";

*(3)* அப்பிரிவின் *(3)* ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :-

"*(3)* (அ) மகோபாத்தியாயர் பல்கலைக்கழகத்தின் நலன்களுக்குக் குந்தகமான ஒருமுறையில் செயல்பட்டுள்ளார் என்பதற்குப் போதிய எண்பிப்புள்ளது எனின், சனாதிபதி, அந்நோக்கத்திற்காக கூட்டப்பட்ட விசேட கூட்டமொன்றில் உத்தரீத்தர சபாவின் மொத்த உறுப்பினர்களின் மூன்றில் இரண்டிற்குக் குறையாதோரால் நிறைவேற்றப்படும் தீர்மானமொன்றின் மீது மகோபாத்தியாயர் பதவியிலிருந்து அகற்றப்படுதலை உறுதிசெய்வதற்கு அவசியமான நடபடிகளை எடுக்க அமைச்சரை தேவைப்படுத்தல் வேண்டும்.

(ஆ) மகோபாத்தியாயர் பல்கலைக்கழகத்தின் கணக்கீட்டு அலுவலராக இருத்தல் வேண்டும் என்பதுடன், அவர் பல்கலைக்கழகத்தின் நிதிகளினதும் ஆதனங்களினதும் கட்டுப்பாடு தொடர்பில் பல்கலைக்கழகத்தின் பேரவையின் ஏதேனும் தீர்மானம் அல்லது ஒழுங்குவிதி அல்லது பணிப்புக்கு இணங்கியொழுகுதல் வேண்டும். இச்சட்டத்தால் அல்லது இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியால் அல்லது விதியால் அவருக்கு அளிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை அவர் பிரயோகித்தலும் புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும்.";

*(4)* (அ) அப்பிரிவின் *(4)* ஆம் உட்பிரிவின் முதலாவது பந்தியை நீக்கஞ்செய்வதன் மூலமும் ;

(ஆ) அப்பிரிவின் *(4)* ஆம் உட்பிரிவின் இரண்டாம் பந்தியை அதன் *(4)* ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன் மூலமும்.

**7.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவினை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன்மூலம் :-

"(1) பல்கலைக்கழகத்தின் முதலாவது பதிவாளர், மூன்றாண்டு காலப்பகுதிக்கு அமைச்சரால் நியமிக்கப் படுதல் வேண்டும். பேரவை தெரிவுக்குழுவொன்றின் விதப்புரையின்மீது அடுத்துறும் பதிவாளர் ஒவ்வொரு வரையும் ஐந்து ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு நியமித்தல் வேண்டும் ; அக்காலப்பகுதி புதுப்பிக்கப்படக்கூடியதாகும். பகிரங்க சேவை அலுவலர் ஒருவர் பொது நிருவாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் இயைபான அலுவலரி னதும் ஒருப்பாட்டினை பல்கலைக்கழகத்தின் பதிவாள ராக நியமிக்கப்பட பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.".

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவினை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன்மூலம் :-

"(3) பதிவாளர் பல்கலைக்கழகத்தின் உதவிக் கணக்கீட்டு அலுவலராக இருத்தல் வேண்டும்.";

(3) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவினை உடனடுத்துப் பின்வரும் பதிய உட்பிரிவினை சேர்ப்பதன்மூலம் :-

"(6) பதிவாளர் பல்கலைக்கழகத்தின் பதிவேடுகள் மற்றும் ஆதனங்களின் கட்டுக்காப்புத் தொடர்பில் பேரவைக்குப் பொறுப்பானவராதல் வேண்டும்.".

**8.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு அதன் (2) ஆம் உட்பிரிவில் "பல்கலைக்கழகத்தின் நிதிகளின் நிருவாகத்திற்கும் சட்டத்தினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் அதன் கணக்குகளைப் பேணுவதற்கும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பதிவாளரின் மேற்பார்வை யின்கீழ் பல்கலைக்கழகத்தின் நிதிகளின் நிருவாகத்துக்கும்

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

சட்டத்தினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் அதன் கணக்குகளைப் பேணுவதற்கும்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**9.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) "மூதவை" என்னும் சொல்லிற்குப் பதிலாக "மூதவை;" என்னும் சொல்லை இடுவதன்மூலம் ;

(2) அதன் (iii) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன்மூலம் -

"(iv) பீடத்தின் ஒரு சபை அல்லது பீடத்தின் சபைகள்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன்மூலம் :-

"(1) (இதனகத்துப்பின்னர் "பேரவை"யெனக் குறிப்பீடு செய்யப்படும்) பல்கலைக்கழகத்தின் பேரவை பல்கலைக்கழகத்தின் நிறைவேற்றுக் குழுவாகவும் ஆட்சிக்குழுவாகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன் அது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) பதவிவழி உறுப்பினர்கள் -

(i) மகோபாத்தியாயர் ;

(ii) ஒவ்வொரு பீடத்தினதும் பீடாதிபதி ;

(iii) மூதவை உறுப்பினர்களிடையேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பல்கலைக்கழக கல்விசார் பணியாட்டொகுதியின் ஈருறுப்பினர்கள் ;

(iv) புத்தசாசனம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுக் கான செயலாளர் அல்லது அவரின் நியமத்தர் ;

(v) உயர்கல்வி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுக் கான செயலாளர் அல்லது அவரின் நியமத்தர் ; அத்துடன்

(vi) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப் பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுக் கான செயலாளர் அல்லது அவரின் நியமத்தர்.

(ஆ) அமைச்சரால் நியமிக்கப்படும் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் -

(i) பௌத்த சாசனத்துக்கு சிறப்பான சேவையாற்றியிருக்கும் ஐந்து கற்றுத் தேர்ந்த பிக்குகள் ; அத்துடன்

(ii) நிதி, சட்டம் மற்றும் நிர்வாகத்தில் அனுபவம்கொண்ட பௌத்த சாசனத் துக்குச் சிறப்பான சேவையாற்றியிருக் கும் மூன்று பௌத்த மத சாமானியர்."

(2) அதன் (9) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவினை சேர்ப்பதன்மூலம் -

"(10) இச்சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும், இப்பிரிவு நடைமுறைக்குவரும் தேதிக்கு உடன்முன்ன ரான நாளன்று பதவிவகித்த பேரவையின் நியமிக் கப்பட்ட உறுப்பினர்கள், இப்பிரிவு நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்கு தொடர்ந்தும் அப்பதவியை வகித்தல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**11**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவானது அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது :-

(அ) அவ்வுட்பிரிவின் (xii) ஆம் பந்தியை நீக்கம்செய்து அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(xii) பல்கலைக்கழகத்தின் பிக்கு மாணவர்களின் பொதுவான நலனை மேம்படுத்துவதற்காக பிக்கு மாணவர்கள் பிரதிநிதிகள் உள்ளடங்கிய தான பிக்கு மாணவர்களின் பேரவையொன்றை நியமித்தல் வேண்டும். அத்தகைய பேரவையின் அமைப்பு, தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் என்பன கட்டளைச் சட்டத்தினால் விதித்துரைக்கப்படல் வேண்டும்;";

(ஆ) அவ்வுட்பிரிவின் (xiv) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை சேர்ப்பதன்மூலமும் :-

"(xv) பல்கலைக்கழக பணியாட்டொகுதியினருக்கு ஏற்புடைத்தாகும் ஆட்திரட்டல் திட்டம் மற்றும் நியமன நடைமுறைகள் 1978 ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட மற்றைய பல்கலைக் கழகங்களில் மேற்கொள்ளப்படும் ஆட்திரட்டல் திட்டத்திற்கும் நியமன நடைமுறைக்கும் சமனானதாக வகுத்தமைப்பதுடன் பணியாட் டொகுதியினரின் பல்வேறு தரங்களையும் ஒவ்வொரு தரத்திற்குமான பதவியணியின ரையும் காலத்திற்கு காலம் தீர்மானித்தலும் ;

(xvi) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கப் பல்கலைக் கழகங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட வேறு பல்கலைக்கழகங்களின் முழுமொத்த சம்பளம் மற்றும் ஊதிய கோட்பாட்டு அடிப்படை யின் மீது பல்கலைக்கழகத்தின் பணியாட்

டொகுதியினரின் பல்வேறு தரங்களுக்கும் செலுத்தப்படற்பாலதான ஊதியங்களையும் அத்தகைய ஊழியருக்கு செலுத்தப்படற்பால தான வேறு நலன்களையும் காலத்திற்குக்காலம் தீர்மானித்தலும்;";

(இ) பந்திகள் (xv) மற்றும் (xvi) என்பவற்றை பந்திகள் (xvii) மற்றும் (xviii) என மீள் இலக்கமிடல் மூலமும்.

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :- *முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் :-

"(2) பல்கலைக்கழகத்தின் முதவை பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) மகோபாத்தியாயர் ;

(ii) பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு பீடத்தினதும் பீடாதிபதி ;

(iii) ஒவ்வொரு கற்கைத் துறையினதும் தலைவர் ;

(iv) பல்கலைக்கழகத்தின் நூலகப்பொறுப்பாளர் ;

(v) பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு நிரந்தரமான பேராசிரியர் ;

(vi) மேற்குறிப்பீடு செய்யப்படாதவர்களும் ஒவ்வொரு பீடத்தினதும் நிரந்தர ஆசிரியர்களால் அவர்களின் எண்ணிக்கையிடையே யிருந்தும் அவர்களிடையேயிருந்தும் தேர்ந்தெடுக்கப்படுபவர்களுமான ஆசிரியரொருவர்;

(vii) வேறு இலங்கை பல்கலைக்கழகங்களின் பௌத்த கற்கைகள் அல்லது கலாசார கற்கைத்துறைகளின் ஆண் பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள் மற்றும் சிரேட்ட விரிவுடையாளர்களிடையேயிருந்து பல்கலைக் கழகத்தின் பேரவையினால் நியமிக்கப்பட்ட மூன்று ஆசிரியர்கள் ;

(viii) ஏதேனும் பல்கலைக்கழகத்தின் பணியாட் டொகுதியின் உறுப்பினர்களாக இராத கற்றுத் தேர்ந்த அத்துடன் சிறப்பான சாமானியர் களிடையேயிருந்து அல்லது குருமார் தொகுதி உறுப்பினர்களிடையே இருந்து பல்கலைக் கழகத்தின் பேரவையினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் மூவர்.";

(2) அதன் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய உட்பிரிவுகளை உட்புகுத்துவதன்மூலம் :-

"(2அ) தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட ஒவ்வோர் உறுப்பினரும் விடயத்திற்கேற்ப அவரது தேர்தல் தேதியிலிருந்து அல்லது நியமனத் தேதியி லிருந்து மூன்று ஆண்டுகளைக் கொண்டதொரு காலப்பகுதிக்கு பதவி வகித்தல் வேண்டும் :

ஆயின் எவ்வாறாயினும், தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் இளைப்பாறுகை காரணமாக, பதவியிலிருந்து விலகு தல் காரணமாக அல்லது மூதவையின் அடுத்தடுத்த மூன்று கூட்டங்களுக்கு சமுகமளிக்காத காரணமாக அல்லது வேறுவகையில் பதவியை வறிதாக்கின், (2) ஆவது உட்பிரிவின் (vi), (vii) மற்றும் (viii) பந்தி களின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி விடயத்திற் கேற்ப, அத்தகைய உறுப்பினர் இடத்திற்கு வேறொரு உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும் அல்லது நியமிக்கப்படுதல் வேண்டும். மேலும், அத்தகைய உறுப் பினர் தமது பதவியை முன்னரே வறிதாக்கினாலொ ழிய, அவருக்கு முற்போந்தவரின் முடிவுறாதெஞ்சியுள்ள பதவிக் காலப்பகுதிக்கு பதவிவகித்தல் வேண்டும்.

(2ஆ) இச்சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும், இப்பிரிவு நடைமுறைக்குவரும் தேதிக்கு உடன்முன்னரான நாளன்று பதவி வகிக்கின்ற நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் இப்பிரிவு நடைமுறைக்கு வரும் தேதியில் அத்தகைய பதவியிலிருந்து இல்லாதொழிதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும் அத்தகைய பதவியிலிருந்து இல்லாதொழிகின்ற நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் மீளநியமிக்கப்படுவதற்கு தகவுடையவராதல் வேண்டும்.''.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் -

(அ) அதன் (vi) ஆம் பந்தியில் ''பேரவையினால்'' என்னும் சொல்லை உடனடுத்து ''சம்பந்தப்பட்ட பீடத்திலிருந்து கிடைக்கும் அறிக்கைகளைக் கருத்துக்கெடுத்த பின்னர்;'' என்னும் சொற்களை சேர்ப்பதன்மூலம் ;

(ஆ) அதன் (vii) ஆம் பந்தியின் (இ) என்னும் விடயத்தில் ''குழு'' என்னும் சொல்லிற்குப் பதிலாக ''பரிசீலித்தலும்;'' என்னும் சொல்லை இடுவதன்மூலம் ;

(இ) அதன் (vii) ஆம் பந்தியின் (இ) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை சேர்ப்பதன்மூலம் :-

''(ஈ) ஆராய்ச்சி மற்றும் வெளியீட்டுக் குழுவொன்றை அமைத்தல்,''.

(2) அதன் ஓராம் உட்பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவொன்றைச் சேர்ப்பதன்மூலம் :-

"(1அ) மூதவை, அமைச்சரின் அங்கீகாரத்துடன், பல்கலைக்கழகத்தின் குறிக்கோள்களை அடைவதற்கு பல்கலைக்கழகத்தின் கற்பித்தல், ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கல் நிகழ்ச்சித்திட்டங்களின் அபிவிருத்திக்காக மூதவை அவசியமானதெனக் கருதக்கூடியவாறான பீடம் அல்லது கற்கைத்துறைகளை காலத்திற்கு காலம் தாபிக்கலாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 18அ, 18ஆ, 18இ மற்றும் 18ஈ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.*

**14**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன் அவை அச்சட்டவாக்கத்தின் பிரிவுகள் 18அ, 18ஆ, 18இ மற்றும் 18ஈ ஆகப் பயனுறுதலும் வேண்டும் :-

*"ஒவ்வொரு பீடத்தினதும் சபை.*

18அ. (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) பின்வருவோரைக்கொண்ட சபையொன்றை பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு பீடமும் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) சம்பந்தப்பட்ட பீடத்தின் பீடாதிபதி ;

(ஆ) பீடத்தை அமைத்துருவாக்கும் கற்கைத் துறைகளின் நிரந்தரமான பேராசிரியர் கள், இணைப் பேராசிரியர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர் மற்றும் நிரந்தரமான விரிவுரையாளர் ;

(இ) மேலுள்ள (ஆ) பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவர் தவிர்ந்த பீடத்தின் நிரந்தரமான கல்விசார் பணியாட்டொகு தியினரால் அவர்களின் எண்ணிக்கை யிலிருந்தும் அவர்களிடையேயிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட இருவர் ;

(ஈ) பீடத்தின் மாணவர்களால் அவர்களின் எண்ணிக்கையிலிருந்தும் அவர்களிடை யேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இரு மாணவர்கள் ;

(உ) பீடத்தின் இயைபான கற்கைத்துறைகளில் சிறப்புப் பெற்றவர்களும் பல்கலைக் கழகத்தின் பணியாட்டொகுதியின் உறுப்பினர்களாக இராத பீடத்தின் சபையால் நியமிக்கப்பட்ட மூவர்.

*சபையினது தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள்.*

18ஆ. (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, சபை பின்வரும் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகித்தலும் புரிதலும் நிறைவேற்று தலும் வேண்டும் :-

(அ) மூதவையினால் பீடத்திற்கு ஆற்றுப்படுத் தப்பட்ட ஏதேனும் கருமங்களைக் கருத்துக்கெடுத்து அறிக்கையிடல் ;

(ஆ) பீடத்தின் கற்கைத்துறைகளின் கற்பித்தல், பரீட்சைகள் மற்றும் ஆய்வுச் செயற்பாடு கள் தொடர்பான எல்லாக் கருமங்களை யும் மூதவையின் கட்டுப்பாட்டிற்கு அமைய ஒழுங்குபடுத்துதல் ;

(இ) ஏதேனும் விசேட விடயத்தினை அல்லது விடயங்களை கருத்துக்கெடுத்து அறிக்கை யிடுவதற்கு பீடத்தின் உறுப்பினர்கள் அல்லாதோர் உள்ளடங்கக்கூடிய குழுக்களை நியமித்தல் ;

(ஈ) பீடத்தின் கற்கைநெறிகள் மற்றும் பரீட்சைகள்மீது விதப்புரைகள் மற்றும் அறிக்கைகளை மூதவைக்கு சமர்ப்பித்தல்; அத்துடன்

(உ) மேற்பார்வையாளர்களாக நியமிப்பதற்கு பொருத்தமான ஆட்களை மூதவைக்கு விதப்புரை செய்தல்.

(2) ஒவ்வோர் பீடமும் பீடாதிபதி ஒருவரைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், அவர் பல்கலைக்கழகத்தின் முழுநேர அலுவலரொருவராகவும் பீடத்தின் கல்வி மற்றும் நிருவாகத் தலைவராகவும் இருத்தலும் வேண்டும். ஒவ்வொரு பீடத்திற்குமான சபை பீடத்தை அமைத்துருவாக்கும் கற்கைத்துறைகளின் தலைவர்களிடையே இருந்து பீடாதிபதியை தேர்ந்தெடுத்தல் வேண்டும் என்பதுடன் அவர் பீடாதிபதியாக அவர் தேர்ந்தெடுக்கப்படுவதன்மீது சம்பந்தப்பட்ட கற்கைத்துறை தலைவராக இல்லாதொழிதலும் வேண்டும் :

ஆயின், இச்சட்டம் தொடங்கும் தேதியன்று நியமிக்கப்படவுள்ள முதலாவது பீடாதிபதி மகோபாத்தியாயரின் விதப்புரையின்மீது பேரவையால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(3)(அ) பீடாதிபதி, பீடத்திற்கான சபையின் ஒவ்வொரு கூட்டத்திலும் தலைமைதாங்குதல் வேண்டும்.

(ஆ) மேலுள்ள 18அ என்னும் பிரிவின் (ஈ) பந்தியின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் பரீட்சைகள் மற்றும் அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு, பீடாதிபதியொருவரை தேர்ந்தெடுத்தல் தொடர்பான கருமங்களுக்காக கூட்டப்பட்ட பீடத்தின் சபைக்கான ஏதேனும் கூட்ட அலுவல்களிலிருந்து புறநீக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய கூட்டங்கள் அத்தகைய புறநீக்கத்தை பொருட்படுத்தாமல் உரியமுறையில் கூட்டப்பட்ட செல்லுபடியான கூட்டமெனக் கருதப்படுதலும் வேண்டும்.

(4) பீடாதிபதி, அவரது தேர்தல் திகதியில் இருந்து மூன்றாண்டு காலத்துக்கு பதவிவகித்தல்

வேண்டும் என்பதுடன், அவர் முன்னரே பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, மீளத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(5) பீடாதிபதி, சுகயீனம் காரணமாக, லீவின்மீது வருகைதராதிருத்தல் காரணமாக அல்லது வேறு ஏதுவினால் மூன்று மாதங்களுக்கு மேற்படாத காலப்பகுதியொன்றிற்கு அவரது பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்ற தற்காலிகமாக இயலாதவராயிருக்குமிடத்து, மகோபாத்தியாயர் அத்தகைய பீடத்தின் கற்கைத்துறை தலைவராக அத்தகைய காலப்பகுதியின்போது பீடாதிபதி இடத்தில் செயலாற்ற வேறோர் ஆளை நியமித்தல் வேண்டும்.

(6) மேலுள்ள 18அ என்னும் பிரிவின் (ஈ) என்னும் பந்தியின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வோர் உறுப்பினரும் அவரது தேர்தல் தேதியிலிருந்து ஒரு கல்வியாண்டுக் காலப்பகுதிக்கு பதவிவகித்தல் வேண்டும் என்பதுடன், தேர்ந்தெடுக்கப்பட்ட வேறு உறுப்பினர்கள் யாவரும் தமது தேர்தல் தேதியிலிருந்து மூன்றாண்டு காலப்பகுதியொன்றிற்கு பதவிவகித்தல் வேண்டும். அத்தகைய உறுப்பினர் ஒவ்வொருவரும் மீளத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தகவுடையவராதலும் வேண்டும்.

ஒரு கற்கைத் துறையின் தலைவர்.

18இ. (1) கற்கைத்துறையொன்றின் தலைவர் மகோபாத்தியாயரின் விதப்புரைமீது பேரவையினால் நியமிக்கப்பட்ட பேராசிரியரொருவர், சிரேஷ்ட விரிவுரையாளரொருவர் அல்லது நிரந்தரமான விரிவுரையாளரொருவராதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், ஏதேனும் கற்கைத்துறையின் தலைவரொருவர், பேரவையினால் நியமிக்கப்படாதவிடத்து, மகோபாத்தியாயர்

பேராசிரியரொருவரை, இணைப்பேராசிரிய ரொருவரை, சிரேஷ்ட விரிவுரையாளரொருவரை அல்லது நிரந்தர விரிவுரையாளரொருவரை நியமனத் தேதியிலிருந்து ஒருமாத காலப்பகுதிக்கு அந்த பீடத்தின் கற்கைத்துறையின் தலைவராக பதிற்கடமையாற்ற நியமிக்கலாம்.

(2) கற்கைகள் துறைக்கான தலைவர், ஏதேனும் தோதான சாசனத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய அவரது நியமன தேதியிலிருந்து மூன்றாண்டு காலப்பகுதியொன்றிற்கு பதவிவகித்தல் வேண்டும் என்பதுடன், பதவியிலிருந்து அகற்றப்பட்டா லொழிய மீள் நியமனத்திற்கு தகவுடையவராதலும் வேண்டும்.

(3) கற்கைகள் துறையொன்றுக்கான தலைவர் சுகயீனம் காரணமாக, லீவின்மீது வருகைதரா திருத்தல் காரணமாக அல்லது வேறு ஏதேனும் ஏதுவினால் மூன்று மாதங்களுக்கு மேற்படாத காலப்பகுதியொன்றிற்கு தமது பதவிக்குரிய கடமைகளை தற்காலிகமாக நிறைவேற்ற இயலாத வராக இருப்பின், மகோபாத்தியாயர் இன்னுமோர் பேராசிரியரை, இணைப்பேராசிரியரை சிரேஷ்ட விரிவுரையாளரை அல்லது நிரந்தர விரிவுரை யாளரொருவரை சம்பந்தப்பட்ட கற்கைகள் துறைக்கு அத்தகைய காலப்பகுதியின்போது அந்தப் பதவியில் செயலாற்றுவதற்கு நியமித்தல் வேண்டும் :

ஆயின் எவ்வாறாயினும், ஏதேனும் கற்கைகள் துறைத் தலைவர் இளைப்பாறுகை காரணமாக, பதவியிலிருந்து விலகல் காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்தினால் தமது பதவிக்குரிய கடமைகளை மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியொன்றிற்கு புரிய இயலாதவராக இருப்பின், சம்பந்தப்பட்ட கற்கைகள்துறையின் தலைவர் பதவி வறிதாக்கப்பட்டதாக கருதப்படுதல்

வேண்டும் என்பதுடன், கற்கைகள்துறையின் புதிய தலைவரொருவர் (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின் படி அத்தகைய பதவிக்கு நியமிக்கப்படுதலும் வேண்டும்.

*பீடங்களை மற்றும் கற்கைத் துறைகளைத் தாபித்தல்.*

*18ஈ.* பல்கலைக்கழகத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான கற்பித்தல் ஆராய்ச்சி என்பவற்றை விருத்தி செய்வதற்காகவும் நிகழ்ச்சித்திட்டங்களை மேம்படுத்தவும் அவசியமானதென ஆளுகின்ற சபை கருதுகின்றவாறான எவையேனும் பீடங்கள் அல்லது கற்கைத்துறைகளை அமைச்சரின் அங்கீகாரத்துடன் ஆளுகின்ற சபை தாபிக்கலாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**15.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவு அதன் (1) ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் முடிவை உடனடுத்து "அத்தகைய நியமனத்தின்மீது அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆசிரியர் பிக்குநிலைகளையின் அவர் அத்தகைய பதவி வகியாது ஒழிதல் வேண்டும்." எனும் சொற்களை சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**16.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவு "ஐம்பத்தைந்தாவது வயதை" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஐம்பத்தேழாம் வயதை" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 57அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**17.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 57 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 57அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

*"பேரவை, முதவை மற்றும் வேறேதேனும் குழு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்*

57அ. இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட பேரவை, முதவை மற்றும் வேறேதேனும் குழு, இச்சட்டத்தின்கீழ் தத்தமது முறையான தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

*குழுவின் விதிகளுக்கும் ஒழுங்குவிதி களுக்கும் இணங்கி யொழுகுதல்.*

வினால் காலத்துக்குக்காலம் ஆக்கப்படக்கூடிய வாறான அத்தகைய விதிகளுக்கும் ஒழுங்கு விதிகளுக்கும் இணங்கியொழுகுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 68 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**18.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 68 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) "பேரவை" என்ற சொல்லமைப்புக்கான வரைவிலக் கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்க ணத்தை உட்புகுத்துவதன்மூலமும் :-

"பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு" என்பது, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு என்று பொருளாகும் ;

(2) "ஆசிரியர்" என்பதன் வரைவிலக்கணத்தில், "எனப் பொருள்படும் ; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "எனப் பொருள்படும்;" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(3) "பேரவை" என்பதன் வரைவிலக்கணத்தில் "எனப் பொருள்படும்," என்னும் சொற்களுக்குப் பதிலாக "எனப் பொருள்படும் ; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**19.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்